# களனிப் பல்கலைக்கழகம்
## மானிடப்பண்பாட்டியல் பீடம் - மொழியியல் துறை
## மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு டிப்ளோமா கற்கைநெறி
## 2025/2026

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிக்கான விண்ணப்பப்படிவங்களை மொழியியல் துறையில் 2025 ஓகஸ்ட் 31 முதல் 2025 செப்டெம்பர் 30 வரை பெற்றுக்கொள்ளலாம்.

மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்களுக்குத் தேவையான அறிவையும் பயிற்சியையும் வழங்குவதே இக்கற்கை நெறியின் பிரதான நோக்கமாகும்.

**கற்கை நெறி வடிவமைப்பு** I. தமிழ் - சிங்களம் மொழிபெயர்ப்பு.
(விண்ணப்பதாரர்கள் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சியினைக் கொண்டிருத்தல் வேண்டும்)
II. ஆங்கிலம் - சிங்களம் மொழிபெயர்ப்பு.
(விண்ணப்பதாரர்கள் ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சியினைக் கொண்டிருத்தல் வேண்டும்)

**கற்கை நெறிக்காலம்:** ஒரு வருடக் கல்வியாண்டு.
(சனிக்கிழமைகளில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 4.00 வரை விரிவுரைகள் நடைபெறும். வகுப்பறை விரிவுரைகள் களனிப் பல்கலைக்கழகத்தில் (onsite) நடைபெறும். தேவை ஏற்படின் நிகழ்நிலை (online) முறை மூலம் நடைபெறும்.

**கட்டணம்:** ரூ. 75,000.00∴- (எழுபத்தைய்யாயிரம் மட்டும்)
(முதலாம் தவணைக் கட்டணமாக ரூ.45,000.00 கற்கைநெறி ஆரம்பம்பத்தில் செலுத்தப்படல் வேண்டும். இரண்டாம் தவணைக் கட்டணமான ரூ.30,000.00 பதிவு செய்யப்பட்ட மூன்று மாதங்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.)

**விண்ணப்பிப்பதற்கான தகுதி:** க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் சித்தி ***அல்லது*** அதற்குச் சமமான தகைமைகள் ***அல்லது*** 10 வருடத்திற்கான உரிய தொழில்துறை அனுபவம்

**கற்கைநெறி ஆரம்பம்:** நொவெம்பர் 2025.

**விண்ணப்பக் கட்டணம்:** விண்ணப்பக் கட்டணம் 750 ரூபாவை நிகழ்நிலை (online) விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்த பின்னர் காட்டப்படும் பற்றுச்சீட்டில் (receipt) உள்ள கணக்கு இலக்கத்திற்குச் செலுத்த வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:** *https://hu.kln.ac.lk/depts/linguistics/* எனும் இணையத்தள பக்கத்தில் உள்ள கூகுள் படிவத்தை நிகழ்நிலை (Online) மூலம் சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் மக்கள் வங்கியில் செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணத்திற்கான அசல் (orginal) பற்றுச்சீட்டுடன் பிறப்புச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, க.பொ.த. உயர்தரப் பெறுபேற்றின் சான்றிதழ் ஆகியவற்றின் நகல் பிரதிகளை "இணைப்பாளர், மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு டிப்ளோமா, மொழியியல் துறை, களனிப் பல்கலைக்கழகம், இல.218 கண்டி வீதி, தலுகம, களனி 11600" (**The Coordinator, Diploma in Translation and Interpretation, Department of Linguistics, University of Kelaniya, No. 218 Kandy Road, Dalugama, Kelaniya 11600)** என்ற முகவரிக்கு 2025 செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"Diploma in Translation and Interpretation – 2025/2026 "**எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

கற்கை நெறிக்கான மாணவர்களின் சேர்க்கை வரையறுக்கப்பட்டிருப்பதனால் முழுமையற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பங்கள் பெறப்படும் வரிசைக்கு ஏற்ப முன்னுரிமை அளிக்கப்படும்.

கற்கை நெறிக்கான மேலதிக விபரங்களை மொழியியல் துறையின் 0112 908 786 எனும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பை ஏற்படுத்தியோ அல்லது dtri@kln.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரியினூடாகவோ *https://hu.kln.ac.lk/depts/linguistics/* எனும் இணையத்தளத்திற்குப் பிரவேசிப்பதன் ஊடாகவோ பெற்றுக்கொள்ள முடியும்.

பதிவாளர்,
களனிப் பல்கலைக்கழகம்
2025.08.30